**சார்பு நீதிமன்றம், நெய்வேலி**

**MCOP.No. 4 /2022 C/W MCOP.7/2022**

பெயர் : திரு. மணிகண்டன் (எ.சா-1)

தந்தை பெயர் : திரு. ரவி தொழில் : உதவியாளர், மோட்டர் வாகன அலுவலகம், நெய்வேலி

கிராமம் : விழுப்புரம்

தாலுக்கா : விழுப்புரம் வயது : 36

தேதி : 04.03.2026

**2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 04-ம் நாளாகிய இன்று சாட்சியாக எ.சா.1 இன் வாக்குமூலம் (1873-ம் ஆண்டின் 10 ஏற்பாட்டின் படி) திருமதி.S.உமா மகேஸ்வரி,பி.ஏ.,எல்.எல்.எம்., சார்பு நீதிபதியாகிய என்னால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்படுகிறது.**

2 எதிர்மனுதாரர் தரப்பில் அனுப்பப்பட்ட அழைப்பாணையின் பேரில் சாட்சி ஆஜராகி 2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் முதல் விசாரணை:

நான் இம்மனுவில் 3 ம் நபர் மற்றும் எ..சா.1 ஆவேன்,

1) எனக்கு நெய்வேலி மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை 1 அவர்கள் அளித்த அதிகார கடிதத்தின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். அந்த கடிதத்தை தாக்கல் செய்கிறேன், அது சா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.
2) எங்களுக்கு வந்த அழைப்பாணையில் வேல்முருகன் த/பெ. கலியப்பெருமாள், திருவள்ளுவர் நகர், ராஜாகுப்பம் அவர்களின் ஓட்டுநர் உரிமம் குறித்த தகவல் கோரப்பட்டிருந்தது.
3) எங்களது கணினியில் மேற்படி நபரின் ஓட்டுநர் உரிமம் குறித்து ஆய்வு செய்த போது மேற்படி நபருக்கு ஓட்டுநர் உரிமம் எதுவும் இவ்வலுவகத்தில் வழங்கப்படவில்லை என்பது கண்டிறியப்பட்டுள்ளது. அதற்கான கணினி ஓட்டுநர் உரிம இணையதள தேடுதல் தகவலின் உண்மை நகலையும் தாக்கல் செய்கிறேன். அது சா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை:

1) நான் தாக்கல் செய்த சாட்சி சான்றாவணம் 1ல் மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை 1 அவர்களின் அலுவலக முத்திரை இல்லை என்றால் சரிதான். வேல்முருகன் என்பவர் தற்காலிக முகவரியை பயன்படுத்தி வேறு மோட்டார் வாகன அலுவலகத்தில் ஓட்டுநர் உரிமம் வாங்க வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை.**

**(ஒப்பம்/—திருமதி. S. உமா மகேஸ்வரி, பி.ஏ., எல்.எல்.எம்.,)**
**சார்பு நீதிபதி,**
**நெய்வேலி**